***IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI***

***OS.No.13/2008*** ***Date: 10.06.2026***

***PW3 –*** ராணியம்மாள்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 41 முதல் 45 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

தாவா பரிகாரம் பற்றி எனக்கு தெரியும். தாவாவில் மொத்தம் 2 அயிட்ட சொத்துக்களை குறிப்பிட்டுள்ளோம். அதில் 1 ம் அயிட்ட சொத்தில் எங்களுக்கு பாகம் உள்ளது என நாங்கள் வழக்குரையில் சொல்லியுள்ளது பொய் என்றால், சரியல்ல. அந்த சொத்து முழுவதும் பிரதிவாதிகளுக்கு மட்டுந்தான் பாத்தியம் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.18 ல் இத்தாவா நிலுவையில் இருக்கும்போதுதான் நாங்கள் மோசடியாக பெயரை சேர்த்துக்கொண்டோம் என்றால், சரியல்ல. அதேபோல் தாவா 1 அயிட்ட சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாமல், வா.சா.ஆ.17 சிட்டாவிலும் மோசடியாக பெயரை சேர்த்துக்கொண்டோம் என்றால், சரியல்ல. அந்த சொத்துக்களில் தேசிய நெடுஞ்சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால், சரிதான். அந்த தொகையை வாங்க உரிமையாளர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டதால், இழப்பீட்டு தொகை முழுவதும் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது என்றால், சரிதான். அந்த தொகை LAOP No.37/2009 என்ற மனுவில் செலுத்தப்பட்டுள்ளது என்றால், எனக்கு தெரியாது. வா.சா.ஆ.19 ல் மேற்படி மனுவின் எண் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த மனுவில் நாங்கள் உண்மை சங்கதிகளை மறைத்து உத்தரவு பெற்றுள்ளோம் என்றால், சரியல்ல. அந்த மனுவின் 5 ம் கோரிக்கையாளர் சின்னான் மகன் பழனி இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் தரப்பினர்களாக சேர்க்க கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால், சரியல்ல. நான் வழக்கிற்காக அதை மறுத்து பொய்

சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல. அதனால் வா.சா.ஆ.19 ஏற்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்றால், சரியல்ல.

66 முதல் 73 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

தாவா 1 ம் அயிட்ட சொத்திற்கு சின்னான் பெயரில் பட்டா உள்ளதால், அவரது வாரிசுகளுக்கு மட்டுந்தான் பாக உரிமையுள்ளது என்றாலும், வாதிகளுக்கு அந்த சொத்தில் உரிமையில்லை என்றாலும், சரியல்ல.

ஒப்பம்/-ராணியம்மாள்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்
சார்பு நீதிபதி, சங்ககிரி.